உ

கணபதி துணை.

சங்கமருவிய

பதினெண் கீழ்க்கணக்கினுள்

# ஐந்திணை யெழுபதும்

# கைந்நிலையும்

பழைய வுரையோடும்

தாம் புதிதாக எழுதிய பிரயோக விளக்கத்தோடும்

---

இடையாற்று மங்கலம்

வைத்தீச்சுவரையரவர்கள் குமாரரும்

சென்னை,

பிரஸிடென்ஸி காலேஜ் Retired தமிழ்ப்பண்டிதரும்

ஆகிய

**அனந்தராமையரால்**

**இயன்ற அளவு பரிசோதித்து,**

சென்னை

**நோபில் அச்சுக்கூடத்தில்,**

பதிப்பிக்கப்பெற்றன.

காபி ரைட்] 1931 [விலை அணா 6.

உ

கணபதி துணை.

# ஐந்திணையெழுபதின் முகவுரை

இந்நூல், சங்கமருவிய நூல்களுள் ஒரு பிரிவாகிய பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்றாக எண்ணலுற்றது; சொற்குற்றமும் பொருட்குற்றமு மற்றது; ஒவ்வொரு திணைக்குப் பதினான்கு வெண்பாக்களாக மூவாதியார் சொற்றது; தமிழ் நூற் பொருட் பிரிவிரண்டனுள் ஒன்றாகிய அகப்பொருளின் சுவை துற்றது; பண்டையுரையாசிரியர்களால் ஆங்காங்கு மேற்கோளாக எடுத்தாளப்பெற்றது. ஐந்திணையையும் எழுபது செய்யுட்களால் புனைந்துரைத்தலின் ஐந்திணை யெழுபதெனப்பெயர்பெற்ற இந்நூலுள், ௨௫-௨௬ (முல்லை, ௧௧-௧௨) ஆம் செய்யுட்களும் ௬௯-௭௦ (நெய்தல் ௧௩-௧௪) ஆம் செய்யுட்களும் யான் பார்த்த கையெழுத்துப்பிரதிகளுள் ஒன்றிலேனும் காணப்படவில்லை. முதலிருபத்துநான்கு செய்யுட்களுக்குக் கிளவிக் குறிப்போடு பழையவுரை யொன்றுண்டு. அந் நாலாறு செய்யுளும் அவ்வுரையும் முன்பு செந்தமிழ்த் தொகுதி நாலிலும் பின்பு வெண்டாமரை ஆறிலும் செவ்வனே வெளி வந்துள்ளன. சற்றேறக்குறைய ௩௦ ஆண்டுகட்கு முன் திருநெல்வேலியில் மூலமட்டும் வெளியிடப்பட்டதென்பர். அது மெய்யுரையோ பொய்யுரையேயோ!

இந்நூற் கையெழுத்துப் பிரதி எனக்குக் கிடைத்த பொழுது பன்முறைபடித்து இன்புற்று ஒரு பிரதி செய்து கொண்டேன். பின்பு ஒரு முறை அதனைப் பார்த்தபோது இவ்வரிய பாடல்களைப் பலரும் அறியும்படி வெளியிடவேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. அதனால் இந்நூல் முழுவதுக்கும் உரை கிடைத்த காலத்து உரையோடு வெளியிடலா மென்றும் இப்போது மூலத்தைமட்டும் கிடைத்த அளவு வெளியிடுவோ மென்றும் துணிந்து பல ஆண்டுகளுக்கு முன் மூலத்தை அச்சிட்டேன்.

அது வெளிவருமுன் அன்பரொருவர் முத லிருபத்து நான்கு செய்யுட்களைப் பழைய வுரையுடனும் இருபத்தேழாவது செய்யுள் முதலியவற்றை 'மூதறிவுடைப்பெரியாரொருவர் குறித்த உரை' என்று அவ்வுரையுடனும் வெளிப்படுத்

தினரென்று அறிவுற்றேன். அதனால் அச்சிட்ட மூலத்தையும் வெளிப்படுத்த ஊக்கமின்றிச் செறிவுற்றேன்.

சில காலத்திற்கு முன் என் வீட்டிற்கு வந்திருந்த தமிழபிமானிசிலரும் தமிழ்ப் புலமையுடையவருமான அன்பர் ஒருவர் யான் பதிப்பித்த இந்நூல் மூல பாடத்தை ஊன்றிப் படித்துவிட்டு இதனை மற்றொருவர் வெளியிட்டிருக்கிறாரே தெரியுமா என்று வினவினர். தெரியும்; அப் புத்தகம் என்னிடத்திலில்லை யென்று சொன்னேன். தம்மிடமிருந்ததைக் காட்டினர். நான் அதனை வாங்கிப்பார்த்தேன். அதனில் கடவுள் வாழ்த்துச் செய்யுள் பதிப்பிக்கப் பெறுமனும் 'முட முதிர்' என்னும் பொருளதிகார மேற்கோட் செய்யுள் கூகூ ஆவதாகப் பதிப்பிக்கப்பெற்று மிருந்தது. இக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஐயுறுதற்கிடமா யிருப்பினும் எனக்குக் கிடைத்த பிரதியிலிருத்தலால் விடாது பதிப்பித்துள்ளேன். 'முடமுதிர்' என்பது எனக்குக் கிடைத்த ப்ரதியிலின்மையால் பதிப்பிக்கவில்லை என்றும் அதுசெய்தற்கிணக்குரியதே என்றும் பிழைகள் இரண்டு பதிப்பிலும் உள்ளனவென்றும் சொன்னேன். அதற்கு அவர், 'அது மிக்கபிழைகளையுடையது. இஃது அவ்வாறில்லை. ஆதலால் பழைய வுரையோடு உஎ-ஆவது செய்யுள் முதலியவற்றுக்கும் ஒருரை யெழுதி இதனை வெளியிடவேண்டும்' என்று தூண்டினர்.

வேறுபதிப்பை நோக்க இப்பதிப்புச் சில இடத்து நல்ல திருத்தமுடையதாயிருப்பினும் பல பாடல் திருந்தாதுபிழைபட்ட நிலையிலேயே யிருத்தலால் உஎ-வது செய்யுள் முதலியவற்றுக்கு பொருள் காண்டலியலாதென்றும் அஞ்சுவதஞ்ச வேண்டுமென்றும் இயல்வது செய்வேனென்றும் கூறினேன்.

பின்பு இந்நூலின் இன்னசெய்யுள் இன்னநூலில் இன்ன இடத்து இன்னதற்கு மேற்கோள் என்ற குறிப்போடு முதலிருபத்து நான்கு செய்யுளின் பழைய வுரையையும் முன் பதிப்பித்த மூலத்தின்பின் பதிப்பித்து வெளியிடலானேன்.

3/6 பஜார்லேன், இ. வை. அனந்தராமையர்.
மயிலாப்பூர். 13-4-1931.

உ

கணபதிதுணை.



மூவாதியர் பாடிய

# ஐந்திணை யெழுபது மூலம்.

கடவுள் வாழ்த்து

எண்ணும் பொருளினிதே யெல்லா முடித்தெமக்கு
நண்ணுங் கலையனைத்து * நல்குமால்—கண்ணுதலின்
முண்டத்தா னண்டத்தான் மூலத்தா னாலஞ்சேர்
கண்டத்தா னீன்ற களிறு.

(பிரதிபேதம்) * நல்குவான்.

## நூல்.

### க. குறிஞ்சி.

க. அவரை பொருந்திய பைங்குர லேனல்
கவரி மடமா கதூஉம் படர்சாரற்
கானக நாட மறவல் வயங்கிழைக்
கியானிடை நின்ற புணை.

உ. கொல்லைப் புனத்த வகில்சுமந்து கல்(க)பாய்ந்து
*துவலி னருவி ததும்பக் கவினிய
நாட னயமுடைய னென்பதனு னீப்பினும்
வாடன் மறந்தன தோள்.

ஙு. இலை† யடர் தண்குளவி ‡ வேய்ந்த பொதும்பிற்
குலையுடைக் காந்த ளினவண் டிமிரும்
வரையக நாடனும் வந்தான்மற் றன்னை
யலையு மலைபோயிற் றின்று.

ச. மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழ
முண்டுவந்து மந்தி முலைவருடக் - கன்றமர்ந்
தாமா சுரக்கு மணிமலை நாடனை
யாமாப் பிரிவ திலம்.

ரு. சான்றவர் கேண்மை சிதைவின்ற யூன்றி
வலியாகிப் பின்னும் பயக்கு மெலிவில்
கயந்திகழ் சோலை மலைநாடன் கேண்மை
நயந்திகழு மென்னுமென் னெஞ்சு.

---

க. 'பாய்ந்து' என்பதில் குற்றியலுகரம் அலகுபெறாது நின்றது.

(பி - ம்) *வானினருவி. † அமர். ‡ வய்ந்த.

௬. பொன்னிணர் வேங்கை கமழு *நளிசோலை
நன்மலை நாட மறவல் வயங்கிழைக்கு
நின்னல தில்லையா †வீயாயோ கண்ணோட்டத்
தின்னுயிர் தாங்கு மருந்து.

௭. ‡ காய்ந்தீய லன்னை யிவளோ தவறில
ளோங்கிய செந்நீ ரிழிதருங் கான்யாற்றுட்
டேங்கலந்து வந்த வருவி குடைந்தாடத்
தாஞ்சிவப் புற்றன கண்.

௮. வெறிகமழ் தண்சுனைத் ‖ தெண்ணீர் துளும்பக்
கறிவளர் தேமா நறுங்கனி வீழும்
வெறிகமழ் தண்சோலை நாடவொன் றுண்டோ
வறிவின்க ணின்ற மடம்.

௯. மன்றத் துறுகற் கருங்கண் முசுவுகளுங்
குன்றக நாடன் ÷றெளித்த தெளிவினை
நன்றென்று தேறித் தெளிந்தேன் றலையளி
யொன்றுமற் றென்று மனைத்து.

௧௦. ×பிரைசங் கொளவீழ்ந்த தீந்தே னிறாஅன்
மரையான் குழவி குளம்பிற் றுகைக்கும்
வரையக நாட +வரையாய் வரினெந்
நிரை தொடி வாழ் தலிலள்

௧௧. கேழ லுழுத கரிபுனக் கொல்லை யுள்
வாழை முதுகாய் கடுவன் புதைத்தயருந்

(பி - ம்) * நளிர்சோலை. † நீநல்காய். ‡ காய்ந்தீயேல். ‖ தண்ணீர். ÷தெளிந்த தெளிவினை. ×பிரசங். + வரையாவ ரினென்.

தாழருவி நாடன் றெளிகொடுத்தா னென்றோழி
நேர்வளை நெஞ்சூன் றுகோல்.

கஉ. பெருங்கை யிருங்களி றைவன மாந்திக்
கருங்கான் மராம்பொழிற் * பாசிடைத் துஞ்சுஞ்
சுரும்பிமிர் சோலை மலைநாடன் கேண்மை
பொருந்தினர்க் கேமாப் புடைத்து.

கஙு. வார்குர லேனல் வளைவாய்க் கிளைகவரு
நீராற் றெளிதிகழ் காநாடன் கேண்மையே
யார்வத்தி னா முயங்கினேன் வேலனு
மீர வலித் தான் மறி.

கச. குறையொன் றுடையேன்மற் றோழி நிறையில்லா
மன்னுயிர்க் கேமஞ் செயல்வேண்டு மின்னே
† யராவழங்கு நீள்சோலை நாடனை நம்மி
‡ லிராவார லென்ப துரை.

குறிஞ்சி முற்றிற்று.

---

உ. முல்லை.

கரு. செங்கதிர்ச் செல்வன் சினங்கரந்த போழ்தினாற்
பைங்கொடி முல்லை மணங்கமழ - வண்டிமிரக்
காரோ ‖ டலமருங் கார்வானங் காண்டொறு
நீரோ + டலமருங் கண்.

---

(பி - ம்) * பாசடை. † அரவழங்கு. ‡ இரவாரல். ‖ + அலம்வரும்.

௧௬. தடமென் பணைத்தோளி நீத்தாரோ வாரார்
மடநடை மஞ்ஞை யகவக்—கடன்முகந்து
மின்னோடு வந்த தெழில்வானம் வந்தென்னை
யென்னாதி யென்பாரு மில்.

௧௭. தண்ணறுங் கோட றுடுப்பெடுப்பக் காரெதிரி
விண்ணுயர் வானத் துருமுரற்றத்—திண்ணிதிற்
புல்லுந ரில்லார் நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல வரும்.

௧௮. * கதழுறை வானஞ் சிதற விதழகத்துத்
தாதிணர்க் கொன்றை யெரி †வளர்ப்பப் பாஅ
யிடிப்பது போலு மெழில்‡வான நோக்கித்
துடிப்பது போலு முயிர்.

௧௯. ஆலி விருப்புற் றகவிப் புறவெல்லாம்
பீலி பரப்பி மயிலாலச்—‖ சூலி
விரிகுவது போலுமிக் காரதிர வாவி
+ யுருகுவது போலு மெனக்கு.

௨0. இனத்த வருங்கலை பொங்கப் புனத்த
கொடிமயங்கு முல்லை தளிர்ப்ப விடிமயங்கி
யானு மவரும் வருந்தச் சிறுமாலை
தானும் புயலும் வரும்.

௨௧. காரிகை வாடத் துறந்தாரும் ×வாராமுன்
கார்கொடி முல்லை யெயிறீனக்—காரோ

---

(பி - ம்) * தகழ்புறை. † வளரப்பாஅய். ‡ வானத்தொக்கி. ‖ சூலினகுவது. + உகுவது. × வாராமைக்கார்க்கொடி.

டுடன்பட்டு வந்தலைக்கு மாலைக்கோ வெம்மின்
*மடம்பட்டு வாழ்கிற்பா ரில்.

உஉ. கொன்றைக் குழலூதிக் கோவலர் பின்னிரைத்துக்
கன்றம ராயம் புகுதர—வின்று
வழங்கிய வந்தன்று மாலையாங் கணை
முழங்கிவிற் கோலிற்று வான்.

உ௩. தேரைத் தழங்குரற் றூர்மணி †வாயதிர்ப்ப
வார்கலி வானம் பெயறொடங்கிக்—கார்கொள
வின்றுற்ற வாரா விடுவார்கொல் காதல
ரொன்றுலும் நில்லா வளை.

உ௪. கல்லேர் புறவிற் கவினிப் புதன்மிசை
முல்லை தளவொடு போதவிழ—வெல்லி
யலைவற்று விட்டன்று வானமு முண்கண்
முலைவற்று விட்டன்று நீர்.

உ௫.

உ௬.

உ௫, உ௬ - ஆம் பாடல்கள் இங்குக் காணப்படவில்லை,

பி - ம்) * மடப்பொழு கிற்டாரிலர். † வாய்திறப்ப.

௨௭. * கார்ப்புடைப் பாண்டில் கமழப் புறவெல்லா
மார்ப்போ டினவண் டிமிர்ந்தாட—நீர்த்தன்றி
யொன்று தலைக்குஞ் சிறுமாலை மாறுழுந்து
நின்றாக நின்றது நீர்.

௨௮. குருந்தலை வான்படலை சூடிச் சுரும்பார்ப்ப
வாயன் புகுதரும் † போழ்தினா—னயிழாய்
பின்னொடு நின்று......படுமழைகொ...
லென்னொடு பட்ட வகை.

முல்லை முற்றிற்று.

---

## ௩. பாலை.

௨௯. எழுத்துடைக் கன்னிரைக்க வாயில்‡விழுத்தொடை
யம்மா றலைக்குஞ் ‖சுரநிரைத் தம்மா[ப்]
பெருந்தகு தாளாண்மைக் கேற்க வரும்× பொரு
ளாகுமவர் காத லவா.

௩௦. வில்லுழு துண்பார் கடுகி யதரலைக்குங்
கல்சூழ்+ பதுக்கையா ரத்தத்திற் பாரார்கொன்
மெல்லியல் கண்ணோட்ட மின்றிப் பொருட்கிவர்ந்து
நில்லாத **வுள்ளத் தவர்.

௩௧. பேழ்வா யிரும்புலி குஞ்சரங் கோட்பிழைத்துப்
பாழூர்ப் பொதியிற் ††புகாப்பார்க்கு மாரிடைச்

---

(பி - ம்.) * காப்பிடைப் பிண்டில் கமழப். † போயினன். ‡ வீழ்த்
தோடை யழுமா. ‖ சரநிறந்தது. × பொருளகருமவர்.
+ பதுக்கை யரணத்திற் பாராகொல். ** உள்ளத்தவர்.
†† பகற்பாற்கு.

சூழாப் பொருணசைக்கட் *சென்றோ ரருணினைந்து
வாழ்தியோ மற்றோ வுயிர்.

௩௨. நீரி லருஞ்சுரத் தாமா னினம்வழங்கு
மாரிடை யத்த †மிறப்பர்கொ லாயிழாய்
நாணினை ‡ நீக்கி யுயிரோ டுடன்சென் றவ
காணப் புணர்ப்பதுகொ னெஞ்சு.

௩௩. பொறிகிளர் ‖ சேவல் வரிமரற் குத்த
நெறிதூ ரருஞ்சுரநா முன்னி— ÷ யறிவிட்
டலர்மொழிச் சென்ற கொடியக+நாட்ட
வலனுயர்ந்து தோன்று மலை.

௩௪. பீரிவர் × கூரை மறுமனைச் **சேர்ந்தல்கிக்
கூருகி ரெண்கி ணிருங்††கிளை கண்படுக்கு
நீரி லருஞ்சுர முன்னி யறியார்கொ
லீரமி னெஞ்சி னவர்.

௩௫. சூரற் புறவி னணில்பிளிற்றுஞ் சூழ்படப்பை
‡‡யூர்கெழு சேவ லிதலொடு—‖‖போர்திளைக்குந்
தேரோடு கானந் தெருளிலார் ++செல்வார்கொ
லூரிடு கவ்வை யொழித்து.

௩௬. முள்ளுடை மூங்கில் பிணங்கிய சூழ்படப்பை
புள்ளி வெருகுதன் குட்டிக் கிரைபார்க்குங்

(பி - ம்) * சென்றானென நினைந்து வாழ்வதியோ மற்றெ னுயிர். † மறப்பர். ‡ நக்கி. ‖ சேவலரிமரற். ÷ அறிவிலா யாமொழிச். + நாட்டறுயர்ந்து. × கூர்மை. ** சேர்ந் தலக்கி. †† கலை. ‡‡ ஊரகழ் சேவனதலொடு. ‖‖ வேர் கிளைக்கும், வேர்த்திளைக்கும். ++ செல்லார்கொல்.

கள்ளர் வழங்குஞ் சுரமென்பர் காதல
ருள்ளம் படர்ந்த நெறி.

௩எ. * பொரிபுற வோமைப் † புகர்படு நீழல்
வரிநுதல் யானை பிடியோ டுறங்கு
மெரிமயங்கு கானஞ் செலவுரைப்ப நில்லா
வரிமயங் குண்கண் ணு ணீர்.

௩அ. ‡ கோள்வல்......வய மாக்குழுமுந்
தாள்வீ பதுக்கைய கான மிறந்தார்கொ
லாள்வினையி னுற்ற ‖ வகன்றவா நன்றுணரா
மீளிகொண் மொய்ம்பி னவர்.

௩௯. கொடுவரி ÷ பாயத் துணையிழந் தஞ்சிக்
கடுவுணங்கு பாறைக் கடவு தெவுட்டு
நெடுவரை யத்த மிறப்பர்கொல் கோண்மாப்
படுபகை பார்க்குஞ் சுரம்.

௪0. மன்ற முதுமரத் தாந்தை குரலியம்பக்
குன்றக நண்ணிக் குறும்பிறந்து × சென்றவர்
கள்ளிய தன்மையர் போது மடுத்தடுத்
தொள்ளிய தும்மல் வரும்.

௪௧. பூங்கணிட மாடுங் கனவுந் திருந்தின
வோங்கிய குன்ற மிறந்தாரை யாநினைப்ப
வீங்கிய மென்றோள் கவினிப் + பிணிதீரப்
பாங்கத்துப் பல்லி படும்.

(பி - ம்.) * பொரிப்புற. † புகைப்படு. ‡ கோழ ளவலப் பயமாக். ‖ அகன்றவரென் றுண. ÷ வாயதுணை. × சென்றவக்கள்ளி. + பனி.

சஉ. ஒல்லோமென் *றேங்கி யுயங்கி யிருப்பளோ
கல்லிவ ரத்த மரி[ப்]பெய் சிலம்பொலிப்பக்
கொல்களி றன்னான்பின் செல்லுங்கொ லென்பேதை
மெல்விரல் சேப்ப நடந்து.

பாலை முற்றிறறு.

---

ச. மருதம்.

சங. ஆற்ற லுடைய் †ன[க]ரும்பொறி நல்லூரன்
மேற்றுச் சிறுதாய காய்வஞ்சிப்—போற்றுருவிக்
‡கட்டக முத்திற் புதல்வனை மார்பின்மேற்
பட்டஞ் சிதைப்ப வரும்.

சச. அகன்பணை யூரனைத் தாமம் பிணித்த
திகன்மை கருதி யிருப்பன்—முக‖னமரா
வேதின் மகளிரை நோவ தெவன்கொலோ
பேதைமை கண்டொழுகு வார்.

சரு. +போத்தில் கழுத்திற் புதல்வ னுணச்சான்றான்
மூத்தே **மினியாம் வருமுலையார் சேரியு
ணீத்து ††நீ ருனவாய்ப் பாணநீ போய்மொழி
கூத்தாடி யுண்ணினு முண்.

சசு. உழலை முருக்கிய செங்கோக் கெருமை
பழனம் படிந்துசெய் மாந்தி—நிழல்வதியுந்

---

(பி - ம்.) * ஒங்கியுடங்கியிருப்பவோ. † நுகர்பொறிதூநல்லூரமேற். ‡ கட்டகழுத்திற். ‖ அமரவேதின். + பாத்தில். ** இனியர்வரு. †† நீருண்வாய பாணனீபொய்ம்மொழி.

தண்டுறை யூரன் மலரன்ன * மாற்புறப்
பெண்டிர்க் குரைபாண வுய்த்து.

௪௭. தேங்கமழ் பொய்கை யகவய லூரனைப்
பூங்கட் புதல்வன் † மிதித்துழக்க—வீங்குத்
தளர்முலை பாராட்டி யென்னுடைய பாவை
வளர் ‡ முலைக் கண்ணுமுழு வார்.

௪௮. பேதை புகலை புதல்வன் றுணைச்சான்றோ
னோதை ‖ மலிமகிழ்நற் கியாது மெவன்செய்தும்
பூவார் குழற்கூந்தற் பொன்னன்னார் சேரியு
× ளோவாது செல்பாண நீ.

௪௯. யாணர்நல் லூரன் றிறங் + கிளப்ப லென்னுடைய
பாண விருக்க வதுகளை—நா ணுடையான்
றன்னுற்ற வெல்லா மிருக்க ** விரும்பாண
நின்னுற்ற துண்டே லுரை.

௫௦. ஒள்ளிதழ்த் தாமரைப் போதுறழு மூரனை
யுள்ளங்கொண் டுள்ளானென் றியார்க் †† குரைக்கோ
—வொள்ளிழா
யச்சுப் பணிமொழி யுண்டேனோ மேனாளோர்
பொய்ச்சூ ளெனவறியா தேன்.

௫௧. பேதைய ரென்று தமரைச் ‡‡ செறுபவோ
போதுறழ் தாமரைக்கண் ணூரனை நேர் ||| நோக்கி

(பி - ம்.) * மார்புற. † மதித்துழக்குமீங்கு. ‡ முலைக்கண்ணுமுக்குவார், முலைக்கஞ்ஞை முகுவார், ‖ வேலிமகிழ்நற்கியா மென்செய் தும். × எவாது. + கிளர்ப்ப வென்னுடைய. ** விரும் பாணைநின். †† உரைக்கோ மொள்ளிழாய் நச்சுப்பணி. ‡‡ செறுபவோர். ||| நோக்க.

*வாய்மூடி யிட்டு மிருப்பவேர் மாணிழாய்
நோவதென் மார்பறியு மின்று.

ருஉ. காதலிற் றீரக் கழிய முயங்கன்மி
னேதந் †துவன்று மொலிபுன லூரனைப்
பேதைப்பட் டேங்கன்மி னீயிரு ‡மெண்ணிலா
வாசை யொழிய வுரைத்து.

ருங. உண்ணுட்டஞ் சான்றவர் தந்த ‖ நசையிற்றென்
றெண்ணுர்க்குக் கன்ணேட்டந் தீர்க்குதுமென்—றெண்ணி
வழிபாடு கொள்ளும் வளவய லூரன்
பழிபாடு நின்மே லது.

ருச. உண்டுறைப் பொய்கை வராஅ லினமிரியுந்
தண்டுறை யூர தருவதோ—வொண்டொடியைப்
பாராய் மனைதுறந் தச்சேரிச் செல்வதனை
யூராண்மை யாக்கிக் கொளல்.

ருரு. பொய்கைநல் லூரன் றிறங் ÷ கிளத்த லென்னுடைய
வெவ்வ மெனினு மெழுந்தீக—வைகன்
மறுவில் பொலந்தொடி வீசு ✝மலற்றுஞ்
சிறுவ னுடையேன் றுணை.

ருசு. ×வளவய லூரன் மருளுரைக்கு மாதர்
வளை இய சக்கரத் தாழி—கொளைபிழையா

(பி - ம்.) * வாயதி பட்டும். † துனன்று. ‡ என்னிலா. ‖ நகையிற் றேன் றெண்ணுர்க்கு. ÷ கிளர்ப்ப வென்னுடைய. ✝ அலவுஞ், அவற்றுட். × வளைவய லூரனமருரைக்கு.

*தொன்றிடை யிட்டு வருமேனின் வாழ்நாட்க
ளொன்றி யனைத்து முளேன்.

மருதம் முற்றிற்று.

---

## ரு. நெய்தல்.

ருஎ. ஒழுகு திரைக்கரை வான்குருகின் றாவி
யுழிதரு மூதை யெடுக்குந் துறைவனை
பேதையா னென்றுணரு நெஞ்சு மினிதுண்மை
யூதிய மன்றோ வுயிர்க்கு.

ருஅ. என்னைகொ றோழி யவர்கண்ணு நன்கில்லை
யன்னை முகனு † மதுவாகும்—பொன்னலர்
புன்னையம் பூங்கானற் சேர்ப்பனைத் ‡ தக்கதேர்
நின்னல்ல தில்லென் றுரை.

ருகூ இடுமண லெக்க ரகன்கானற் சேர்ப்பன்
‖ கடுமான் மணியரவ மென்று—÷ கொடுங்குழாய்
புள்ளரவங் கேட்டுக் + கலுழ்ந்தாள் சிறுகுடிய
ருள்ளரவ நாணுவ ரென்று.

சுO. மணிநிற நெய்த லிருங்கழிச் சேர்ப்ப
னணிநல முண்டகன்று னென்றுகொ லெம்போற்
× றணிமண லெக்கர்மே லோதம் **பெயரத்
துணிமுந்நீர் துஞ்சா தது.

---

(பி- ம்) * என்றிடை. † மிகத்தளர நாமினிப் புன்னை. ‡ தக்கதோ. ‖ கடுமாமணி. ÷ கொடுங்குழை. + பெயர்ந்தாள். × திணி மலரெக்கர். ** பெயர்ந்து துணி.

# ஐந்திணை யெழுபது.

௬௧. கண்டிரண் முத்தம் பயக்கு மிருமுந்நீர்ப்
பண்டங்கொ ணாவாய் வழங்குந் துறைவனை
முண்டகக் கானலுட். *கண்டே னெனத்தெளிந்தே
னின்ற வுணர்விலா தேன்.

௬௨. †அடும்பிவ ரெக்க ரலவன் வழங்குங்
கொடுங்கழிச் சேர்ப்ப னருளா னெனத் தெளிந்து
கள்ள மனத்தா ‡ னயனெறிச் செல்லுங்கொ
னல்வளை || சேர நடந்து.

௬௩. +கண்ணறு நெய்தல் கமழுங் கொடுங்கழித்
தண்ணந் துறைவனோ டன்னில னாயிழாய்
வண்ணகைப் பட்டதனை யாண்மை யெனக்கருதிப்
பண்ணமைத் ÷தேர்மேல் வரும்.

௬௪. தெண்ணீ ×ரிருங்கழி வேண்டு மிரைமாந்திப்
பெண்ணைமேற் சேக்கும் வணர்வாய்ப் புணரன்றி
றண்ணந் துறைவற் குரையாய் மடமொழி
வண்ணந்தா வென்று தொடுத்து.

௬௫. எறிசுறுக் குப்பை யினங்கலக்கத் தாக்கு
மெறிதிரைச் சேர்ப்பன் கொடுமை **யறியாகொல்
கானக நண்ணி††யருளற் றிடக்கண்டும்
கானலுள் வாழுங் குருகு.

௬௬. நுண்ஞாண் வலையிற் பரதவர் போத்தந்த
பன்மீ னுணங்கல் கவருந் துறைவனைக்

(பி - ம.) * கண்டென் றனைத் தெளிந்தேன். † அடும்பிமிர். ‡ இயனெறி. || சோரநடந்து. + கண்ணுறு. ÷ தோண்மேல். × அருங்கழி. ** அறியான்கொல். †† அருளூற்றிட.

கண்ணினுற் காண *வமையுங்கொ லென்றோழி
வண்ணந்தா †வென்கந் தொடுத்து.

சுஎ. இவர்திரை நீக்கியிட் டெக்கர் மணன்மேல்
கவர்கா லலவன் றனபெடை யோடு
நிகரி லிருங்கழிச் ‡சேர்ப்பவென் றோழி
படர் பசலை யாயின்று தோள்.

சுஅ. சிறுமீன் கவுட் கொண்ட செந்தூவி நாரா
யிறுமென் குரலநின் பிள்ளைகட்கே யாகி
நெறிநீ ரிருங்கழிச் சேர்ப்ப னகன்ற
நெறியறிதி ||மீன்றபு நீ.

சுகூ.

எ0.

69, 70 - ஆம் பாடல்கள் காணப்படவில்லை.

(பி - ம்.) * இயையுங்கொல். † என்னத்தொடுத்து. ‡சேர்ப்பனென்.
|| மீன்றவு நீ.

# செய்யுண் முதற்குறிப் பகராதி.

| செய்யுளின் முதல். | பக்கம் | பாட்டு | செய்யுளின் முதல். | பக்கம் | பாட்டு |
|---|---|---|---|---|---|
| அகன்பணை, | ௧௦ | ௪௪ | சான்றவர், | ௨ | ௫ |
| அடும்பிவர், | ௧௪ | ௬௨ | சிறுமீன், | ௧௫ | ௬௮ |
| அவரை, | ௨ | ௧ | சூரற்புறவின், | ௮ | ௩௫ |
| ஆலிவிருப்புற்று, | ௫ | ௧௯ | செங்கதிர்ச், | ௪ | ௧௫ |
| ஆற்றலுடை..ய, | ௧௦ | ௪௩ | தடமென்பணைத், | ௫ | ௧௬ |
| இடுமணலெக்கர், | ௧௩ | ௫௯ | தண்ணறுங்கோடல் | ௫ | ௧௭ |
| இலையடர், | ௨ | ௩ | தெண்ணீரிரும், | ௧௪ | ௬௪ |
| இவர்திரை, | ௧௫ | ௬௭ | தேங்கமழ்பொய்கை, | ௧௧ | ௪௭ |
| இனத்தவருங்கலை, | ௫ | ௨௦ | தேரைத்தழங்குரற், | ௬ | ௨௩ |
| உண்டுறைப்பொய்கை, | ௧௨ | ௫௪ | நீரிலருஞ்சுரத், | ௮ | ௩௨ |
| உண்ணுட்டஞ், | ௧௨ | ௫௩ | நுண்ஞாண்வலையிற், | ௧௪ | ௬௬ |
| உழலைமுருக்கிய, | ௧௦ | ௪௬ | பிரைசங்கொள, | ௩ | ௧௦ |
| எண்ணும் பொருள். | ௧ | ௧௰ | பீரிவர்கூரை, | ௮ | ௩௪ |
| எழுத்துடைக், | ௭ | ௨௯ | பூங்கணிடமாடு, | ௯ | ௪௧ |
| எறிசுறாக்குப்பை, | ௧௪ | ௬௫ | பெருங்கை, | ௪ | ௧௨ |
| என்னைகொரேழி, | ௧௩ | ௫௮ | பேதைபுகலை, | ௧௧ | ௪௮ |
| ஒல்லோமென், | ௧௦ | ௪௨ | பேதையரொன்று, | ௧௧ | ௫௧ |
| ஒழுகுதிரைக்கரை, | ௧௩ | ௫௭ | பேழ்வாயிரும்புலி, | ௭ | ௩௧ |
| ஒள்ளிதழ்த்தாமரை, | ௧௧ | ௫௦ | பொய்கைநல், | ௧௨ | ௫௫ |
| கண்டிரண், | ௧௪ | ௬௧ | பொரிபுற, | ௯ | ௩௭ |
| கண்ணறுநெய்தல், | ௧௪ | ௬௩ | பொறிகிளர்சேவல், | ௮ | ௩௩ |
| கதழுறை, | ௫ | ௧௮ | பொன்னிணர், | ௩ | ௬ |
| கல்லேர்புறவிற், | ௬ | ௨௪ | போத்தில்கழுத்தில், | ௧௦ | ௪௫ |
| காதலிற்றீரக், | ௧௨ | ௫௨ | மணிநிறநெய்தல், | ௧௩ | ௬௦ |
| காய்ந்தீயல், | ௩ | ௭ | மன்றத்துறகத், | ௩ | ௯ |
| கார்ப்புடைப், | ௭ | ௨௭ | மன்றப்பலவின், | ௨ | ௪ |
| காரிகைவாட, | ௫ | ௨௧ | மன்றமுதுமரத், | ௯ | ௪௦ |
| குருந்தலைவான், | ௭ | ௨௮ | முள்ளுடைமூங்கில், | ௮ | ௩௬ |
| குறையொன்று, | ௪ | ௧௪ | யாணர்நல்லூரன், | ௧௧ | ௪௯ |
| கேழலுழுத, | ௩ | ௧௧ | வளவயலூரன், | ௧௨ | ௫௬ |
| கொடுவரி, | ௯ | ௩௯ | வார்குரலேனல், | ௪ | ௧௩ |
| கொல்லைப், | ௨ | ௨ | வில்லுழுதுண்மார், | ௭ | ௩௦ |
| கொன்றைக்குழை, | ௬ | ௨௨ | வெறிகமழ், | ௩ | ௮ |
| கோள்வல், | ௯ | ௩௮ | ஆகச் செய்யுள் | | ௬௯ |

இவ்வுரையின்பின் சில செய்யுட்களுக்கு ஆங்காங்கும் உரையில்லாத சில செய்யுட்களுக்கு இறுதியிலும் இலக்கண நூல்களிற் காணப் பட்டவை குறிப்புக்களாகச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

1 (அவரை) என்றது, தோழி தலைமகனை வரைவுகடாயது.

(இதன் பொருள்) அவரை பொருந்திய கதிரையுடைய பசுந் தினையைச் சுவரிமடமா கதுவாநின்ற படர்ந்த சாரலினையுடைய கானகநாடனே, மறவாது நினைப்பாயாக: வயங்காநின்ற அணியினையுடையாட்கு யான் நடுவுநின்றபுணை. என்றவாறு. (க)

1. இது வரைந்தெய்துந் திறன் நீட்டித்த வழித் * தோழி தலைவற்குக் கூறியதற்கும் (தொல். கள. சூ. க. இளம்) பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றற்கும் (நாற். கள. சூ. ருரு.) மேற்கோள்.

† 2 (கொல்லைப் புனத்த)

(இ - ள்) கொல்லைப்புனத்த அகிலைச்சுமந்து கற்களைப்பாய்ந்து மழையானுளதாய அருவி முழங்குதலான் அழகு பெற்ற நாடன் தன்னையடைந்தார்க்கு ஈரமுடையனென்பதனுன் அவன் பிரிந்தானுயிலும் வாடுதலை மறந்தன என்றோள்கள். எ - று. (உ)

2. இதனை வரைவு தலைவந்தவழிக் கூறியதற்கு மேற்கோள் காட்டி, "இதனுள், 'நயனுடையன்' என்றதனுல் வரைவு தலை வந்தது கூறினாம்" என்பர் இளம்பூரணர். (தொல். கள. சூ. உக) நச்சினார்க்கினியர், வரைவு தலை வந்தமைக்கு மேற்கோள் காட்டி "'நயனுடையன்' என்பதனுல் வரைவு தலைவந்தமையும் 'நீப்பினும்' என்பதனுல் அவன்வயிற் பரத்தைமையுங்கூறினுள்" என்றும், "இது வெளிப்பட்ட பின் வரைவு நிகழ்ந்தது" என்றும் கூறுவர் (தொல். கள. சூ. உ0, சக.)

---

* தோழி புணையாகத் தலைவற்கு முந்துற்ற கூட்டமுண்மை புணர்க என்பது பிரதிபேதம். † இதற்கும் 27-வது செய்யுள் முதலியவற்றுக்கும் கிளவி குறிக்கப்படவில்லை.

3 (இலையடர்) என்றது தோழி தலைமகன் வரைவுமலிந்தமை தலைமகட்துச் சொல்லியது.

(இ - ள்) இலைபயின்ற தண்குளவிக்கொடிகள் படர்ந்து மூடிய பொதும்பின்கட் பூங்கொத்தையுடைய காந்தளின் இனவண்டுகளொலிக்கும் வரையகநாடனும் வரைவொடுவந்தான்; ஆதலான், இன்று நமக்கு அன்னையலைக்கும் அலையும்போயிற்று. எ - று. (௩)

3. இது வரைவு தலை வந்தமை அறிந்து கூறியதற்கும் (தொல். கள. சூ. உக. இளம்) தலைமகள் உவகையாற்று துளத்தொடு கிளத்தற்கும் (நாற். வரைவி. சூ. ச.) மேற்கோள்.

4 (மன்றப்பலவின்) என்றது தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத்தலைமகள் இயற்பட மொழிந்தது.

(இ - ள்) மன்றின்கண் நின்ற பலவின் சுளைமுதிர்ந்த இனிய பழத்தைத்தின் றின்புற்றுவந்து ஆமாவின்முலையை மந்திவருட, அவ்வாமாத் தன்கன்றிற்குப்போல அன்புபட்டுப் பாலைச்சுரக்கும் அணிமலைநாடனை யாமுளேமாகப் பிரிவதிலம். எ - று. (௪)

4. இஃது அளிசிறந்த வழித் தலைவி கூறியதற்கு மேற்கோள்; (தொல். கள. சூ. உக. இளம்) இதனை 'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரத்து, 'அன்னவும் உள' என்புழி, 'இன்னுந் தலைவி கூற்றாய் இவற்றின் வேறுபட வருவனவெல்லாம் இதனான் அமைக்க' என்று உரைத்து, அதற்கு மேற்கோள் காட்டினர். நச். (தொல். கள. சூ. உ௦)

5 (சான்றவர்) இதுவுமது.

(இ - ள்) அமைந்தாருடைய நட்புச் சிதைதலின்றி நிலைபெற்று அடைந்தார்க்கு வலியாகி மறுமையின்கண்ணும் பயனைச்செய்யும்; அதுபோல நீராற்றிகழாநின்ற சோலையையுடைய மலைநாடனுடைய நட்பு மெலிவின்றி இன்பத்தைத் திகழ்விக்கும் என்னாநின்றது என்னெஞ்சு. எ - று. (௫)

6 (பொன்னிணர்) என்றது புணர்ந்து நீங்குந் தலைமகனைக் கண்டு தோழி வரைவுகடாயது.

(இ - ள்) பொன்போன்ற பூங்கொத்தையுடைய வேங்கை கமழாநின்ற குளிர்ந்த சோலையையுடைய நன்மலை நாடனே, மறவா தொழிவாயாக; வயங்கிழைக்கு நின்னல்லது ஓரரணில்லையாதலால் நின் கண்ணோட்டத்தான் இன்னுயிரைத்தாங்கு மருந்து நல்காயோ. எ - று. (சு)

7 (காய்ந்தியல்) என்றது பகற்குறிக்கட் டலைமகன் சிறைப் புறத்தானாகப் படைத்துமொழிகிளவியாற் றோழிவரைவுகடாயது.

(இ - ள்) வெகுளவேண்டா அன்னாய், குற்றமிலள் இவள்; மிக்க சிவந்த நீர் தாழ்ந்தோடும் கான்யாற்றுள் தேனொடும் கலந்துவந்த அருவிநீரைக் குடைந்தாடுதலான் இவள்கண் தாஞ் சிவப்புற்றன; ஆதலான். எ - று. (எ)

8 (வெறிகமழ்) என்றது புணர்ந்து நீங்குந் தலைமகனைக்கண்டு தோழி வரைவுகடாயது.

(இ - ள்) விரைகமழா நின்ற குளிர்ந்த சுனையின்கண் தெளிந்த நீர் துளும்ப மிளகு படர்ந்து வளராநின்ற இனியமாவினது நறுவிய கனிவீழும் வெறிகமழ் தண் சோலை நாடனே, நின் அறிவின்கண் நின்றதொரு பேதைமையுண்டோ. எ - று. (அ)

9 (மன்றத்துறுகல்) என்றது தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

(இ - ள்) மன்றங்களிலே நெருங்கிய கல்லின்கண் கருங்கண் முசுக்கள் குதிபாயுங் குன்றநாடன் என் மனத்தைத் தெளிவித்த தெளிவினைப் பிழையாதென்று தேறினேற்கு அவன்செய்த தலையளி யொன்று; அவ்வொன்றும் அப் பெற்றித்தாய்ப் பழுதாகாது. எ - று. (க)

9. இது நொந்து தெளிவொழித்தற்கு மேற்கோள்; (தொல். களவு. சூ. உக. இளம். சூ. உ௦. நச். 'மறைந்தவற் காண்டல்')

10 (பிரைசங்கொள) என்றது தோழி தலைமகனைக் கண்டு வரைவுகடாயது.

(இ - ள்) தேறலைப் பிறர்கொள்ள வீழ்ந்த தீங்தேனிறால்களை மரையான்கன்று குளம்பால் உழக்கும் வரையக நாடனே, நீ வரையாது வருவையாயின் எங்கள் நிரைதொடி உயிர் வாழாள். எ - று.

10. இது தலைமகன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையுங் கூறலுள் நாடு கூறலுக்கு மேற்கோள்; (நாற். களவி. சூ. ருo.)

11 (கேழலுழுத) * என்றது தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் கேட்ப இயற்படமொழிந்தது.

(இ - ள்) பன்றிகள் கொம்பினால் உழுத சுட்டுக்கரிந்த புனக்கொல்லையுள் வாழையின் முதிர்ந்தகாயைக் குரங்கினுட் கடுவன்கள் அப்புழுதியிற் புதைத்தயருந் தாழ்ந்த அருவிகளையுடைய நாடன், என் றோழியாகிய நேர்வளைக்கு நெஞ்சுநன்று கோலாகத் தெள்ளிய வஞ்சினங் கூறினான், எ - று. (கக)

11. இதன் முதலடி இருபெயரொட்டுப் பண்புத் தொகையுள் கேழற் பன்றி என்பது பின்வருஞ் சொல்லின்றித் தன் பொருள் உணர்த்தியதற்கு மேற்கோள்; (தோல். எச்ச. சூ, உo. நச்.) இச்செய்யுள் அவன் சூளுறவு பொய்த்ததெனத் தோழி இயற்பழித்ததற்கு மேற்கோள்; (தோல். களவி. சூ. உங. நச்.)

12 (பெருங்கை) என்றது தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

(இ - ள்) பெருங்கையையுடைய இருங்களிறு ஐவன நெல்லைத் தின்று கருங்காலையுடைய மரால்பொழிலிற் பச்சிலைநிழலிற் றுயிலும் வண்டுகள் ஒலிக்கும் சோலை மலைநாடன் கேண்மை[யைப்] பொருந்தினார்க்கு ஏமாப்புடைத்து. எ - று. (கஉ)

12. இஃது அவனியலுரைத்து ஆற்றுவித்ததற்கும் (தோல். களா. சூ. உச. இளம்.) பிரிவிடை, தோழி இயற்பட மொழிந்து வற்புறுத்ததற்கும் (தோல். கள, சூ. உங. நச்.) மேற்கோள்.

---

* இக்கிளவியும் உரையும் விளக்கமாகவில்லை.

13 (வார்குழல்) என்றது வெறியாட் டெடுத்துக்கொண்ட விடத்துத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.

(இ - ள்) நீண்ட கதிரினையுடைய பசுந்தினையை வளைவாய்க் கிளியினம் கவரும் நீரானே தெரிந்து திகழாநின்ற சோலைகளையுடைய மலைநாடன்கேண்மையைக் காதலினால் மிரம்ப மேவினேன், பிரிதலாற்றேனாயினேன்; அவ்வாற்றாமை தெய்வத்தினாயது என்று முருகற்கு மறியையறுக்கத் துணிந்தான் வேலோன். தோழி, இதனை விலக்குவாயாக. எ - று. (கஙு)

14 (குறையொன்று) என்றது தலைமகன் வரும்வழியின் ஏதத்திற்குக் கவன்ற தலைமகள் வரைவுவேட்டுத் தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்) நின்னான் ஒரு காரிய முடையேன், தோழி; நிலைமையில்லாத என் மன்னுயிர்க்கு அரணஞ் செய்யவேண்டும்; இப்பொழுதே பாம்புகளான் வழங்கப்படுகின்ற நீண்ட சோலையையுடைய நாடனை நம் மனையின்கண் இரா வரவேண்டா என்பதனைச் சொல். எ - று. (கச)

14. இது பொழுதும் ஆறும் புரைவதன்மை கூறியதற்கும் (தொல். களவி. சூ. உ௦. நச்.) தலைமகள் நெறி விலக்குவித்ததற்கும் (நாற். களவி. சூ. சஅ.) மேற்கோள்.

15 (செங்கதிர்) என்றது பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்) செய்ய கதிரினையுடைய செல்வன் சீற்ற மடங்கிய காலத்தின்கண் பசுங்கொடியையுடைய முல்லைகள் பூத்து மணங் கமழ்தலான் வண்டுகள் ஒலிக்கக் கார்ப்பருவத்தோடு தடுமாறுகின்ற முகில்களையுடைய வானங் காணுந்தோறும் நீரோடுங்கூடத் தடுமாறு நின்றன கண்கள். எ - று. (கரு)

16 (தடமென்) இதுவுமது.

(இ - ள்) பெரியவாய் மெல்லியவாகிய மூங்கில்போன்றிருந்த தோளினையுடையாய், நம்மைத் துறந்தார் இக்காலத்து வருகின்றிலர்; மெல்லிய நடையினையுடைய மயில்கள் அழைக்கக் கடன்

முகந்து மின்னுடனே வந்தது, எழிலினையுடைய வானம்; ஆதலால் பின்னையும் என்னை வந்து "நீ என் செய்யக்கடவாய்" என்றிரங்கி ஒன்றைச் சொல்லுவாருமில்லை. எ - று. (௧௬)

17 (தண்ணறங்கோடல்) இதுவுமது.

(இ - ள்) குளிர்ந்த நறங்கோடல் துடுப்புப்போலப் பூங்குலைகளை யேந்த, சார்காலத்தை என்றுகொண்டு முகில்கள் மிக்கவானத் தின்கண் உருமேறு ஒலிப்ப, திண்ணிதாக முயங்குவாரையில்லாதார் நடுங்கும் வகை துன்பத்தைச் செய்யுமாலை கொல்வாரைப்போல வாரா நின்றது. எ - று. (௧௭)

18 (கதமுறை) இதுவுமது.

(இ - ள்) விரைந்து துளிகளை முகில்கள் இதழகத்தே சிதற, தாதினையுடைய பூங்கொத்துகளையுடைய கொன்றைகள் எரிசிறத்தை மிகுப்ப, பரந்து கழறுவதுபோலும் எழில்விசும்பைக் காணுந்தோறும் வருந்தித் துடிப்பதுபோலாநின்றது என் உடலம். எ - று.

19 (ஆலி) இதுவுமது.

(இ - ள்) மழைத்துளிகளைக் காதலித்தழைத்துக் காடெலாந் தோகைகளைப் பரப்பி மயிலினங்கள் ஆட, கருக்கொண்டு விரிகுவது போலும் இக்சார்முழக்க எனக்கு என்உயிர் உருகுவதுபோலாநின்றது. எ - று. (௧௯)

20 (இனத்த) இதுவுமது.

(இ - ள்) இனங்களையுடைய கலைகள் களித்து மிக, புனங்களிலுள்ள கொடிமிடைந்த முல்லை தளிர்ப்ப, இடியோடே கூடமிடைந்து, யானும் என்காதலரும் வருந்த, துன்பத்தைச் செய்யும் மாலைதானும் மழைப்பெயலும் எம்மேல் வாராநின்றன. எ - று.

21 (காரிகை) இதுவுமது.

(இ - ள்) எம்மழகு சுருங்க எம்மை நீங்கினாரும் வருவதற்கு முன்னே கருங்கொடியையுடைய முல்லைகள் நல்லார் எயிறுபோல அரும்பக் காரோடு உடனேயுளதாய்வந்து எம்மைநலிகின்ற மாலைக்கு எம்மைப்போல வலியிழந்து மெலிவாற்றியிருந்து உயிர் வாழ்வார் இல்லை. எ - று. (௨௧)

22 (கொன்றைக்குழல்) இதுவுமது.

(இ - ள்) கொன்றை யென்னுநின்ற குழலூதிக் கோவலர் பின்னே நிரைத்து........., கன்றை விரும்பிய நிரையாயங்கள் ஊர்தோறம்புக, இவ்விடத்தின்கண் வழங்கவேண்டி வந்தது மாலை; யாம் இறந்துபடாதிருந்து காணும்படி முழங்கி வில்லைக் கோலிற்று மழை. எ - று. (உ௨)

23 (தேரைத் தழங்குரல்) என்றது பருவங் கண்டழிந்த தலைமகள் சொல்லியது.

(இ - ள்) ஓசையையுடைய முகில்கள் பெயலைத் தொடங்கிக் கார்ப்பருவத்தைக்கொள்ள, நம் காதலர் தேரைபோன்ற தழங்கு குரலையுடைய குதிரைத்தார்மணிகள் * வாயதிர்ப்ப, இன்று நாம் ஆற்றியுளமாம் வகை வாராதுவிடுவார் கொல்லோ தோழி; நம் வளை, யாதும் நிற்கின்றது இல்லையால். எ - று. (உ௩)

24 (கல்லேர்) இதுவுமது.

(இ - ள்) கல்லெழுந்து கிடந்த கானத்தின்கண் அழகுபெற்றப் புதல்கண் மிசை முல்லைகளும் செம் முல்லைகளும் பூக்கண் மலர இரவின்கண் முகிலும் அலைவற்றவிட்டன......கண்களும்......ன... எ - று. (உ௪)

54. இது வணங்கியன் மொழியான் வணக்கற்கண், தோழி கூற்று நிகழ்ந்ததற்கும் (தொல். கற்பி. சூ. ௯. இளம்.) அதன்கண் தோழி தாழ்ந்து நிற்கும் நிலைமைக்கும் (தொல். கற்பி. சூ. 9 நச்.) மேற்கோள்.

~~55.~~ 58. இதனை, "உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும்" என்பதற்கு, 'தலைவனுக்கு உரையெனத் தோழிக்கு உரைத்தற்கண்ணும் என்று உரைப்பினும் அமையும்' என்று மறுபொருள் கூறி அதற்கு மேற்கோள் காட்டினர், இளம்; (தொல். களவி. சூ. உ௨) தலைவி அறத்தொடு நிற்றற் பகுதியுள் தோழி வினவாமல் தானே தலைவற்குக் கூறென்று கூறற்கு மேற்கோள் காட்டினர், நச்; (தொல். களவி. சூ. உ௧ 'வரைவிடை வைத்த')

---

(பிரதிபேதம்) * வாய்திறப்ப.

59. இஃது அல்லகுறிப் பட்டுழித் தோழிகூற்று நிகழ்ந்ததற்கு மேற்கோள்; (தொல். கள. சூ. உச. இளம்) இதனைத் தலைவி அல்லகுறிப்பட்டுழித் தோழிகூற்று நிகழ்ந்ததற்கு மேற்கோள் காட்டி, 'இஃது இவன் இனி ஆண்டுவரின் சுற்றத்தார் அறிவரென்றது' என்ற குறிப்பும் எழுதினர், நச்சினார்க்கினியர்; (தொல். கள. சூ. சஉ)

60. இது தலைமகள் அவன் பிரிந்த வழி உறங்காமை காரணமாகப் புலம்பி யுரைத்ததற்கும் (தொல். கள. சூ. உகா. இளம்) தோழி இல்லுளிருந்து சிறைப்புறமாகக் கூறியதற்கும் (தொல். கள. சூ. சஉ. நச்) மேற்கோள்.

61. இதனை 'வந்தவழி யெள்ளினும்' என்பதற்கு, 'பெரிதாகிய இடையீட்டினுள் அரிதாகத் தலைவன் வந்த ஞான்றும் பெறாத ஞான்றைத் துன்ப மிகுதியாற் பெற்றதனையும் கனவுபோன்று கொண்டு இகழ்ந்திருப்பினும்' என்று பொருள் கூறி, அதற்கு மேற்கோள் காட்டி, 'இது முன்பு இன்பந் தருவனென உணர்ந்து நின்ற உணர்வு ஈண்டில்லாத யான் புணர்ச்சி வருத்தம் தருமென்று தெளிந்தேனென்றாளெனக' என்று குறிப்பும் எழுதியுள்ளார், நச்; (தொல். களவி. சூ. உ0) இது தலைமகன் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறற்கு மேற்கோள்; (நாற். வரைவி. சூ. கு)

66. இதனை "சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும்" என்புழி மேற்கோள் காட்டி, "'நுண் ஞா, ...தொடுத்து' என்பதும் இதன்பாற் படுமாறு உணர்ந்து கொள்க" என்பர் இளம்பூரணர்; (தொல். கற்பி. சூ. கு) நச்சினார்க்கினியர், 'அவன் விலங்குறினும்' என்புழித் தோழி கூற்று நிகழ்ந்ததற்கு மேற்கோள் காட்டியும் (தொல். சூ. கள. உங) 'மாணலந்தா வென வகுத்தற் கண்ணும்' என்புழி மேற்கோள் காட்டி இதுவும் இதன்பாற்படும் என்றும் அமைத்தனர்; (தொல். கற். சூ. க)

68. இதன் முதலடி ஐகாரவீற்று அஃறிணைப் பெயர் உயர்திணைப் பெயர் போல விளியேற்று வந்ததற்கு மேற்கோள்: (தொல். விளிமரபு. சூ. ந. நச்.)

உ

கணபதி துணை.

# கைந்நிலை முகவுரை.

---

இந்நூல், சங்கமருவிய *பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்று; அகப்பொருளையே விஷயமாகக் கொண்டுள்ளது; மாறோகத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடனாரால் ஒவ்வொரு திணைக்குப் பன்னிரண்டாக ஐந்திணைக்கும் இயற்றப்பட்ட அறுபது வெண்பாக்களையுடையது; பண்டையுரையாசிரியர்களால் சிற்சில இடத்து மேற்கோளாகக்காட்டப்பெற்றபெருமைவாய்ந்தது.

இந்நூற் பிரதியொன்று எனக்குச் சிறிது காலத்திற்கு முன் கிடைத்தது. அது முதலிலும் இடையிலும் சில பகுதியின்றியும் இருக்கும் செய்யுட்களிலும் சில பகுதி சிதைந்தும் பிழை விரவியும் இருந்தது. அதில்முதலாவதாகியகுறிஞ்சித்திணை முழுவதும் மற்றைத் திணைகளில் சிற்சில பாடல்களும் இல்லை. முன்பு வேறு சிலரிடத்திலிருந்த இந்நூல் ஏட்டுச் சுவடிகளைப் பார்த்திருக்கிறேன். அவையும் இதனைப் போலவே முதலிலும் இடையிலும் சில ஏடின்றியும் சிதைந்தும் பிழைபட்டுமே யிருந்தன.

பல பிரதிகள் கிடைத்தாலன்றி இந்நூல் திருத்தமடையா தென்றாலும் நெடுங்காலமாக முயல்பவர்க்கும் வேறு பிரதி கிடைக்காமையால் வேறு பிரதி கிடைத்தல் அரிதென்றெண்ணி, ஐந்தாறு பிரதிகளே யுள்ளநாட்டில், பல நூறு பிரதிகள் உளவாதலும் இப்பெயருள்ள நூலொன்று இன்னுமிருக்கிறதென்றுபல ரறிதலும் பதினெண் கீழ்க்கணக்கும் அச்சிடப்பெற்றனவென்று தமிழபிமானிகள்

---

* பதினெண் கீழ்க்கணக்கு இவை என்பதில் பலருக்குக்கருத்து வேறுபாடுண்டு. என் கருத்து:—

1 நாலடியார், 2 நான்மணிக்கடிகை, 3 இன்னா நாற்பது, 4 இனியது நாற்பது, 5 கார்நாற்பது, 6 களவழி நாற்பது, 7 ஐந்திணையைம்பது; 8 ஐந்திணையெழுபது, 9 திணைமாலை நூற்றைம்பது, 10 திணைமொழியைம்பது, 11 திருக்குறள், 12 திரிகடுகம், 13 ஆசாரக்கோவை, 14 பழமொழி வெண்பா, 15 சிறுபஞ்ச மூலம், 16 முதுமொழிக்காஞ்சி, 17 எலாதி, 18 கைந்நிலை என்பதே.

மகிழ்தலுமாகிய சில பயன் இதனாலுளவாமென்று கருதி எனக்குக் கிடைத்த பகுதியைப் பதிப்பிக்கலானேன்.

அது முற்றப் பெறுங்காலத்தில் இராமநாதபுரம் ஸேதுஸம்ஸ்தான வித்வானும் சொல்வல்லரென்று புகழத்தக்கவரும் என்னண்பருமாகிய ஸ்ரீமத். உ.வே. ரா. இராகவையங்காரவர்கள் சென்னைக்கு வந்திருந்தார்கள். அவர்களிடத்தில் இந்நூற் பிரதியொன்று இருப்பதை யறிந்து யான் இந்நூல் பதிப்பிக்கத் தொடங்கியதையும் அதனிலைமையையும் அறிவித்து அவர்களிடமிருக்கும் பிரதியை உதவவேண்டுமென்று கேட்டேன். அவர்கள் அதற்கு இணங்கி, தாம் தம்மூர் போய்ச்சேர்ந்ததும் அனுப்புவதாக வாக்களித்து அங்ஙனமே ஊர் போனவுடன் தபால் வாயிலாகப் பிரதியையும் அளித்தார்கள். அந்தப் பிரதியும் சிற்சிலவிடத்துச் சிதைவுற்றதேயாயினும் அஃது அறுபது பாடல்களையு முடையதாயும் பலபாடல் உரையோடுகூடியதாயும் இருந்தமை மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. வேறொரிடத்தும் அறுபதுபாடல்களுமுள்ள பிரதி கண்டதில்லை. அவர்கள் பிரதி உதவாதிருப்பின் என்பிரதியிலுள்ள 24. பாடல்களேயன்றி மற்றவை வெளிவரா. அவர்கள் பிரதி இப்பதிப்பிற்குக் கிடைத்தமை தமிழ்நாடுபுரிந்த தவப்பேறென்றே நினைக்கிறேன். அவர்கள் மனமுவந்து சமயத்தில் பிரதியை உதவியதற்கு யான் பெரிதும் நன்றிபாராட்டும் கடப்பாடுடையேன்.

பிரதிபேதங்கள் எனக்குக் கிடைத்த பிரதியில் எழுதியதை அடித்திருந்ததனாலும் பின்பு மேலெழுதப் பெற்றிருந்ததனாலும் அப்படியும் படிக்கலாமென்று தோன்றியதனாலும் மேற்கோள் கொண்ட இடத்துக் காணப்பட்டதனாலும் வேறு பிரதிகளாலும் ஏற்பட்டவை.

இந்நூலில் 11 பாடல்கள் ஏதோ ஒரு தமிழ்ப் பத்திரிகையில் சில மாதங்கட்கு முன் வெளிவந்திருக்கின்றனவென்று கேள்வியுறுகிறேன்; ஆனாலும் இதனை முதலில் முழுவதும் வெளியிடும் பேற்றை எனக்குத் தந்தருளிய தமிழ்த்தெய்வத்தை மனமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்,

மயிலாப்பூர்
3/6 பஜார்லேன்
9—5—31.

இ. வை. அனந்தராமையன்.

உ

கணபதி துணை.

# *கைந்நிலை மூலமும் பழையவுரையும்

---

## க. குறிஞ்சி.

1 நுகர்த லிவருங் கிளிகடி யேன
னிகரின் †மடமா னெரியு மம...சாரற்
கானக நாடன் கலந்தா ‡னிலனென்று
மேனி சிதையும் பசந்து. (க)

2 வெந்த புனத்துக்கு வாச முடைத்தாகச்
சந்தன மேந்தி யருவி கொணர்ந்திடூஉம்
வஞ்ச மலைநாடன் வாரான்கொ றோழியென்
னெஞ்ச நடுங்கி வரும். (உ)

3 பாசிப் பசுஞ்சுனைப் பாங்க°ரழிமுதுநீர்
காய்சின மந்தி பயின்று கனிசுவைக்கும்
பாசம்பட் டோடும் படுகன் மலைநாடற்
காசையிற் றேம்புமென் னெஞ்சு. (௩)

---

(பிரதிபேதம்) * கைந்நிலையறுபது. † மடமானரியும். ‡ இன்றென்று?

4 ஓங்கல் விழுப்பலவி னின்பங் கொளீஇய
தீங்கனி மாவின் முசுப்பாய் மலைநாடன்
றூன்கலந் துள்ளாத் தகையனோ நேரிழாய்
தேங்கலந்த சொல்லிற் *றெளித்து. (௪)

5 இரசங்கொண் டின்றே னிரைக்குங் குரலைப்
பிரசை யிரும்பிடி பேணி வரூஉ
†முரசருவி யார்க்கு மலைநாடற் கென்றூ
ணிரைய மெனக்கிடந்த வாறு. (௫)

6 மரையா வுகளு மரம்பயில் சோலை
யுரைசான் மடமந்தி போடி யுகளும்
புரைதீர் மலைநாடன் பூணோந் தகல
முரையா வழங்குமென் னெஞ்சு. (௬)

இச்செய்யுள் தலைவி கூற்று நிகழுமிடத்து மறையாது அவள் வாய்விட்டுச் சொல்லி அழுங்குதலாகிய விட்டுயிர்த் தழுங்க லென்பதற்கு மேற்கோள், தொல். கள. சூ. 21. இளம்.

7 கல்வரை யேறிக் கடுவன் கனிவாழை
யெல்லுறு போழ்தி னினிய பழங்‡கவுட்கொண்
டொல்லென வோடு மலைநாடன் றன்கேண்மை
|| சொல்லச் சொரியும் வளை. (௭)

இது, கூறிய வாயில் கொள்ளாக் காலைத் தலைவியுரைத்தற்கு மேற்கோள்; தொல். கள. சூ. 21, இளம்.

---

(பிரதிபேதம்) * தெளிந்து. † முரகருவி. ‡ கைக்கொண் டொல்லையே. || சொல்லவொசியும்.

8 கருங்கைக் கதவேழங் கார்ப்பாம்புக் குப்பங்
கி.. ... ச்கொண்...... ..... ...சரும்
பெருங்கன் மலைநாடன் பேணி வரினே
சுருங்கு மிவளுற்ற நோய். (அ)

9 காந்த ளரும்புகை யென்று கதவேழ
மேந்தன் மருப்பிடைக் கைவைத் தினனேக்கிப்
பாய்ந்தெழுந் தோடும் பயமலை நன்னாடன்
காய்ந்தான்கொ னங்கட் கலப்பு. (கூ)

10 பொன்னிணர் வேங்கைப் புனஞ்சூழ் மலைநாடன்
மின்னி னனையவே லேந்தி யிரவினு
ளின்னே வருங்கண்டாய் தோழி யிடையாமத்
தென்னை யிமைபொரு மாறு. (கo)

11 எறிகிளர் கேழல் கிளைத்திட்ட பூழி
பொறிகிளர் மஞ்ஞை புகன்றா குடையு
முறிகிளர் நன்மலை நாடன் வருமே
யறிதுரைத்திவ் வல்லி னமக்கு. (கக)

12 நாக நறுமலர் நாள்வேங்கைப் பூவிரவிக்
கேச மணிந்த கிளரெழிலோர்—ளாக
முடியுங்கொ லென்று முனிவா னொருவன்
வடிவேல்கை யேந்தி வரும். (கஉ)

க. குறிஞ்சி முடிந்தது.

## உ. பாலை.

13 *கடுகி யதரலைக்குங் கல்சூழ் பதுக்கை
விடுவி லெயினர்தம் விளையோர்த் தோடு
நெடுவிடை யத்தஞ் செலவுரைப்பக் கேட்டே
வடுவிடை மெல்கின கண். (௧)

14 கதநாய் துரப்ப ........ .........
........ .......... .................யவிழும்
புதன்மாறு வெங்கானம் போக்குரைப்ப நில்லா
மூதன்.... ............ ..... (௨)

15 .......... ........... ....... ..............
........... ........... ....... ......
கடுங்கதிர் வெங்கானம் பல்பொருட்கட் சென்றார்
கொடுங்கன் மலை... ... (௩)

16 ...............வுறையு மெல்லென் கடத்துக்
கடுஞ்சின வேங்கை கதழ்வேழஞ் சாய்க்கு
................ ............ ....................
............ ............ நமர். (௪)

17 கடமா விரிந்தோடுங் கல்லத ரத்த
மடமா விரும்பிடி வேழ மரு
........... ண்ட வுண்கண் ணு ணீர்
........... ............ .... (௫)

18 ஆமா சிலைக்கு மணிவரை யாரிடை
யேமாண் சிலைபார்க் கினம்†மா விரிந்தோடுங்

(பிரதிபேதம்) * கடுகிய காலலைக்கும். † மாயிரிந்தோடும்.

தாமாண்பில் வெஞ்சுரஞ் சென்றார் *வரக்கண்டு
வாய்மாண்ட பல்லி படும்.

என்றது பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

(இதன்பொருள்.) ஆமாவினம் தம்முண் மாறுபடும் அணி வரையையுடைய அரிய விடத்தே மாட்சிமைப்பட்ட சிலையையுடைய வேடர்க்கு அஞ்சி †இனமா இரிந்தோடுந் தாமாட்சியில்லாத வெஞ்சுரத்தின்கட்சென்றார் வருவரென்பதனை அறிந்திட மாண்ட பல்லி சொல்லா நின்றது. என்றவாறு. (௬)

இது கற்பின்கண் நிமித்தங்கண்டு தோழி கூறியதற்கு மேற்கோள்; தொல். கற். சூ. 9. இளம், நச்.

19 அரக்கார்ந்த வோமை ‡யரிபடு நீழற்
செருக்கில் கடுங்களிறு சென்றுறங்கி நிற்கும்
பரற்கானம் பல்பொருட்குச் சென்றார் வருவர்
நுதற்கிவர்ந் தேறு மொளி.

என்றது.

(இ-ள்.) அரக்கினது நிறமார்ந்த ஓமை மரத்தின் ஐதாகிய நிழலின்கீழ்க் களிப்பில்லாத கடுங்களிறு தூங்கி நிற்கும் பரற்கானத்தின்கட் பல் பொருளின் பொருட்டுச் சென்றார் நீடாதே வருவர்; நினது நுதற்குப் பரந்தேறு நின்றது ஒளி; ஆதலான். எ-று. (௭)

20 ............ ............ ........ ...........
............ ........ ....‖விழ்க்கு
மோவாத வெங்கானஞ் சென்றார் ...........
........வார் வருவார் நமர்.

---

(பிரதிபேதம்) * வரல்காண்டும், வரக்கூறும். † இனமாபிரிந்தோடுந் தம்மாட்சி. ‡ அரில்படு. ‖ வீழ்க்கும்

இதுவுமது.

(இ - ள்) தன் பெட்டை நீர்வேட்கை தணித்தல் வேண்டிக் கோழிச் சேவல் வரிமாலைக்குத்தச் செவ்வியமான் கண்டு கலைமாக் கண்ணீ ரவிழ்க்கும் ஒழியாத வெம்மையையுடைய கானத்தின்கட் சென்ற நமர் இப்பொழுதே நம்மை............நீ......... (அ)

21 ஆந்தை குறுங்கலி கொள்ளநம் மாடவர்
காய்ந்து கதிர்தெறூஉங் கானங் கடந்தார்பின்
னேந்த விளமுலை யீரெயிற்று யென்னெஞ்சு
நீந்து நெடுவிடைச் சென்று

என்றது பிரிவிடையாற்றத தலைவி தோழிக்குச் சொல்லியது.

(இ - ள்) ஆந்தைகள் இடைவிடாது ஆள............ளக் கனன்று பசவன்............கன் கானங் கடந்துசென்ற நம் ஆடவர்பின்னே வந்தவ்ள முலையடைய குளிர்ந்த எயிற்றாய்! நெடுவிடைச் சென்று நீந்தா நின்றது என் னெஞ்சு. எ - று. (க)

22 கள்வர் திரிதரூஉங் கானங் கடந்தவ
ருள்ளம் பிரிந்தமை *நீயறிதி—யொள்ளிழாய்
தொல்லை விடாக நீந்திப் பெயர்ந்தவர்
வல்லைநாங் காணும் வரவு.

என்றது பிரிவிடை வேறுபட்ட கிழத்தியைத்
தோழி வற்புறுத்தியது.

(இ - ள்) ஆறலை கள்வர் திரிதரும் வழியைக் கடந்து சென்ற அன்பில்லாமையானன்றி ஆள்வினை காரணத்தால் நம்மைப் பிரிந்தமை நீயறிவை; ஒள்ளிழாய்! தொல்லை பலைகளை நீந்தி †மீண்டு மற்றவர் வருவரவினை விரைந்து நாங்காண்பேம். எ - று. (௧௦)

(பிரதிபேதம்) * நீயறியொள்ளிய. † ஈண்டு.

23 சிலையொலி வெங்கணையர் சிந்தியா நெஞ்சிற்
கொலைபுரி வில்லொடு கூற்றுப்போ லோடு
மிலையொலி வெங்கானத் திப்பருவஞ் சென்றார்
தொலைவிலர்கொ றோழி நமர்.

**என்றது ஆற்றளெனக் கவன்றதோழிக்கு ஆற்றுவலென்பது படச்சொல்லியது.**

(இ - ள்) சிலையினுண் டைவருமோதையையும் வெய்ய கணையையு முடையார் ஆராய்ச்சியில்லாத நெஞ்சினாற் கொலையை விரும்பும் வில்லுடனே கூற்றுப்போல வம்பலரை வேடர் தொடர்ந்தோடும் இலைகளுலர்ந்தொலிக்கும் வெங்கானத்துள்ளே இக்கடிய வேனிற்காலத்தின்கட் சென்ற நமர் தளர்விலர்கொல்லோ தோழி. எ - று. (௧௧)

24 வெஞ்சுரந் தேரோட வெஃகிநின் றத்தமாச்
சிந்தையா னீரென்று *செத்துத் தவாவோடும்
பண்பி லருஞ்சுர மென்பவா லாய்தொடி
நண்பிலார் சென்ற நெறி

**இதுவுமது.**

(இ - ள்) வெஞ்சுரத்தின்கட் பேய்த்தேரோட அதனை நீரென்று விரும்பி நின்று அத்தத்துவாழும் மான்கள் சிந்தையால் நீரென்றுகருதி ஒழியாமலோடும் நன்மையில்லாத அருஞ்சுரமென்று பலருஞ் சொல்லுவார்; ஆய்தொடி! இவள் இதற்காற்றாளென்று கருது நண்பில்லாதார் சென்ற வழி. எ - று. (௧௨)

உ. பாலை †முடிந்தது.

---

(பிரதிபேதம்) * செத்துக் கவர்போடும். †முற்றும்.

## ௩. முல்லை.

25 கார்செய் புறவிற் கவினிக் கொடிமுல்லை
கூரெயி றீனக் குருந்தரும்ப—வோரும்
வருவர்நங் காதலர் வாட்டடங் கண்ணாய்
பருவரல் பைதனேப் கொண்டு.

என்றது தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

(இ - ள்) ......முல்லைகள் அழகுபெற்றுக் கூரெயிறுபோல முகையைத் தரக் குருந்துகளரும்ப இப்பருவத்தின்கண் தப்பாதே வருவர்; ........ணய்! புகலைநோய்கொண்டு அலமராதொழிக.எ-று. 'ஒரும்' என்பது, அசை. (௧)

26 குருதி மலர்த்தோன்றி கூர்முகை யீனா
........ சேவ லெனப்பிடவ மேறிப்
பொருதி யெனவெருளும் பொன்னேர் நிறத்தா
யரிதவர் வாரா விடல்.

என்றது..............

(இ - ள்) .........தோன்றி கூரிய முகையினை யீனத் தன்னேடு மாறுபடுஞ் சேவலென............ (௨)

27 ........ ........ ........ ........
........ ........ ர யொல்கப் புகுதரு
கார்தரு மாலை கலந்தார் வரவுள்ளி
யூர்தரு மேனி பசப்பு. (௩)

28 ....... ....... ........ ........
....... பெய்த புறவிற் கடுமான்றே
ரொல்லைக் கடாவா ரிவர்காணின் காதலர்
சில.... ....... .... (௪)

29 ........ ........ ........ குருந்தலரப்
பிடா ரிரலே பிணைதழுவக்—காடாரக்
*கார்வானம் வந்து முழங்.... ........ ........
........ ........ .... ........ (௫)

30 ........ ........ ........ ........
........ ........ ........ ........
கொன்றை கொடுகுழ லூதிய கோவலர்
மன்றம் புகுதரும் போழ்து. (௬)

31 ........ ........ ........ ........
........ ........ ........ ........
........ ........ ........ வானம்
வந்து துளிவழங்கக் கண்டு. (௭)

32 காரெதிர் வானங் கதமெரி சி....
........ ........ ........ ........
........ ...லகை மெழுநெஞ்சே செல்லாயாற்
கூரெரி மாலைக் குறி.

33 தளையவிழ் பேத... ........ ........
........ ........ ........ ........
உளையார் கலிநன்மாப் பூட்டி வருவார்
களையாரோ நீயுற்ற நோய். (௯)

34 முல்லை யெயிறீன ........ ........
........ ........ ....ன மல்கிக்
கடன்முகந்து கார்பொழியக் காதலர் வந்தா
ருடனியைந்த கெ.... .... (௧௦)

(பிரதிபேதம்) * கானவானம்.

35 ........ ........ ........ ........
...... ...ாடைப் பால்வா யிடையர்
தெரிவிலர் தீங்குழ லூதும் பொழுதா
லரித... ...... ....

என்றது...........

(இ - ள்) ......... யாராயாது தங்குழலூதும் பொழுதால்; இப்பொழுது அவர் வாராவிடுதல் அரிது. எ - று. (௩௫)

36 பிடவங் குருந்தொடு பிண்டி மலர
மடவ மயில்கூவ மந்திமா கூரத்
*தடமலர்க் கோதைபாய் தங்கார் வருவ
ரிடப மெனக் கொண்டு தாம்.

இதுவுமது.

(இ - ள்) குருந்தொடு பிடவங்களும் பிண்டிகளு மலர மடமையையுடைய மயில்கள் அழைக்க மந்திகளு மாக்களும் ஒடுங்காநிற்பத் தடமலர்க் கோதையாய்! தங்கார் காதலர் தாம் வருவார்; என்று போல. எ - று. (௩௬)

௩. முல்லை †முடிந்தது.

---

## ௪. மருதம்.

37. கழனி யுழவர் கலியஞ்சி யோடித்
தழென மதவெருமை தண்கயம் பாயும்
பழன வயலூரன் பாணவெம் முன்னர்ப்
பொழெனப்பொய் கூறு தொழி.

---

(பிரதிபேதம்) * தடவரக்கோதையாய். †முற்றும்.

என்றது பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது.

(இ - ள்) கழனி யுழவர் தொலியை அஞ்சியோடி வலியை யுடைய எருமை தழென வொலிக்கத் தண்கயத்தின்கட் பாயும் பழன வயலூரன் பாண! எம்மெதிர் கதுமெனப் பொய்கூறுதே நீங்கு. எ - று. (௧)

38 கயலினம் பாயுங் கழனிநல் லூர
*நயமிலே மெம்மனை யின்றொடு வார
றுயிலி னிளமுலையார் தோணபந்து வாழ்கின்
குயி .... .... .... கொண்டு.

என்றது பரத்தை மாட்டுப் †பயின்று வருந் தலைமகனைப் புலந்து தலைமகள் சொல்லியது.

(இ - ள்) கயலினம் பாயுங் கழனி............க்கின்பமில்லாதே மாகிய எம்மனையுள் இன்று தொடங்கி வாரா............வர் குயில் போலப் பாடும் பாடலையுங் கேட்டு. எ - று. (௨)

39 முட்ட முதுநீ ரடைகரை மேய்ந்தெழுந்து
தொட்ட வரிவரால் பாயு ம‡புன லூரன்
கட்டலர் கண்ணிப் புதல்வனைக் கொண்டெம்மில்
சுட்டி ||யலைய வரும்.

என்றது............

(இ - ள்) முட்ட...ரந்த கரைகளிலே செறிந்தெ.........முந்து மிக்க வரியையுடைய வரால்கள் பாயும் புனலூரன் முகையாகக் கட்டி யலரப்பட்ட கண்ணியையுடைய புதல்வனைக்கொண்டு மற்ற வன் நெற்றிச்சுட்டி அலையும்படி வாராநின்றான். எ - று. (௩)

40 தாரா விரியுந் தகைவய லூரனை
வாரா னெனினும் வருமென்று—சேரி

(பிரதிபேதம்) * னயனில னென்மனை. †பயனறிந்து வரும் ‡ வயலூரன. || அலைப்ப.

புலப்படுஞ் சொல்லுமிப் பூங்கொடி யன்னார்
கலப்படுங் கூடுங்கொன் மற்று.

என்றது வாயில் வேண்டிய பாணற்குத் தோழி
வாயின் மறுத்தது.

(இ - ள்) தாராக்கள் பரக்குந் தண்மையையுடைய வயலூரனைப் பரத்தையர் சேரி செல்லானெனினுஞ் செல்லுமென்று அச்சேரியிலே வெளிப்படுஞ் சொற்களும் இப்பூங்கொடியன்னாள் அவனோடு கூட்டத்தினை *விலக்கா நிற்கும். மெய்யாக அவன் பரத்தையர் சேரியின்கட் சென்றொழுகிய அதனைக்கேட்டால் அவள் †புலவாதுகூடுமோ. எ - று. (௪).

41 பொய்கைநல் லூரன் றிறங்கிளப்ப வென்னுடைமை
யஃதன் றெனினு மறிந்தேம்‡யாஞ்—செய்தி
நெறியி னினியசொன் னீர்வாய் மழலைச்
சிறுவ னெமக்குடைமை யால்.

என்றது வாயிலாகியபாணற்குத் தலைவி வாயின்மறுத்தது.

(இ - ள்) இனிய சொன்னீர்...மழலைச் சிறுவனை எமக்குத் துணையாகவு முடைமையாற் (?) பாணனே! பொய்கை நல்லூரன் றிறங்களைச்சொல்லவே என்ன பயனுடையை; அவன் செய்த பிழையைப் பிழையன்றென்று நீ மறுத்துச் சொல்லினும் நெறியினானே அதனையறிந்தேம். எ - று. (௫).

42 ‖நீத்தநீ ரூர னிலைமையும் வண்ணமும்
யார்க்குரைத்தி பாண வதனால்யா மென்செய்துங்
கூத்தனைக் கொண்டு துறைநீ யுடைமையே
லாட்டுவித் துண்ணினு முண்.

---

(பிரதிபேதம்) * விலக்காது நிற்கும். † புலவிக்கூடுமோ. ‡யாமெய்தினெறி. ‖நீத்துநீர்.

இதுவுமது.

(இ - ள்) நீத்தநீ ரூரனுடைய ஒழுக்கமுடைமையும் பண்புடைமையும் யார்க்கு உரைக்கின்றாய் பாண! அவன் ஒழுகுகின்ற ஒழுக்கத்தான் யாம் என் னிரங்குவேம்; காரியமுடையையாயின் அவனைக் கூத்தனைக்கொண்டு பரத்தையர்கள் சேரிகடோறுங் கூத்தாட்டுவித்துக்கொண்டு உண்ணினும உண்; உண்ணுதொழியினும் ஒழி. எ - று. (௬)

43 போதவிழ் தாமரைப் பூந்துறை யூரனைத்
தாதவிழ் கோதைத் *தகையியலார் தாம்புலப்ப
ரேதின்மை சொல்லி †யிருப்பர் பிறர்மகளிர்
பேதைமை ‡தம்மேமேலே கொண்டு.

இதுவுமது.

(இ - ள்) போதவிழா நின்ற தாமரைப்பூ......னைத் தாதவிழ் கோதையையும் அழகியவாய இயல்பையுமுடையார் புலக்குந் தகையார் தா மன்றே......வத்த......புலந்து ஏதின்மையைச் சொல்லியிருக்குமத்துணையே. எ - று. (எ)

44 தண்டுறை யூரன் றடமென் பணைத்தோளாய்
வண்டூது கோதை வகைநாடிக் - கொண்டிருந்து
கோல வனமுலையும் புல்லினு னென்றெடுத்துச்
சாலவுந் தூற்று மலர். (அ)

45 மூத்தே மினிப்பாண முன்னாயி னுமிளையேங்
கார்த்தண் கலிவயலூ ரன் கடிதெமக்குப்
பாத்தில பயமொழி பண்பு பலகூறி
நீத்த லறிந்திலே மின்று. (௯)

---

(பிரதிபேதம்) * தகையுள்ளார். † இருப்பாய். ‡ தம்மேலக்கொண்டு.

46 கயனீர்நாய் பாய்ந்தோடுங் காஞ்சிநல் லூர
னயமே பலசொல்லி நாணினன் போன்றான்
பயமில்யாழ்ப் பாண பழுதாய கூறு
தெழுநீபோ நீடாது மற்று. (௧0)

47 அரக்காம்ப றாமரை யஞ்செங் கழுநீ
ரொருக்கார்ந்த வல்லி பொலித்தாக் குத்துஞ்
செருக்கார் வளவய லூரன்*பொய்ப் பாண
விருக்கவெம் மில்லுள் வரல். (௧௧)

48 கொக்கார் வளவய லூரன் குளிர்சாந்த
மிக்க வனமுலை புல்லான் பொலிவுடைத்தா
தக்கயாழ்ப் பாண தளர்முலையாய் மூத்தமைந்தா
ருத்தரம் வேண்டா வரல். (௧௨)

ச. மருத †முடிந்தது.

---

## ரு. நெய்தல்.

49 நாவாய் வழங்கு நளிதிரைத் தண்கடலு
ளோவா கலந்தார்க்கு மொல்லெ‡ னிருக்குப்பைப்
‖பாவாரஞ் சேர்ப்பற் குரையாய் பரியாது
நோயா னுணுகிய வாறு. (௧)

50 நெடுங்கடற் றண்சேர்ப்ப நின்னொ டுரையே
னொடுங்கு மடற்பெண்ணை யன்றிற்குஞ் சொல்லேன்
கடுஞ்சூளிற் றான்கண்டு கானலுண் மேயுந்
தடந்தாண் மட நாராய் கேள். (௨)

---

(பிரதிபேதம்) * பொய்பாண. † முற்றும். ‡ இருக்குப்பை.
‖ பாவாகஞ் சேர்.

51 மணிநிற நெய்தன் மலர்புரையுங் கண்ணு
யணிநல முண்டிறந்து ....ம்மருளா விட்ட
துணிமுந்நீர்ச் சேர்ப்பற்குத் தூதோடு வந்த
பணிமொழிப் புள்ளே பற. (௩)

52 அன்னையு மில்கடிந்தாள் யாங்கினியா மென்செய்கம்
புன்னையங் கானலுட் புக்கருந்து—நின்னை
நினையான் றுறந்த நெடுங்கழிச் சேர்ப்பற்
குரையேனோ பட்ட பழி. (௪)

53 அலவன் வழங்கு மடும்பிமி ரெக்கர்
நிலவு நெடுங்கான னீடார் துறந்தார்
புலவுமீன் குப்பை கவருந் துறைவன்
கலவான்கொ ரூழி நமக்கு

என்றது............

(இ - ள்).........கபுலவு மீன் குப்பையை எல்லாரும் விரும்பிக் கொள்ளும் துறைவன் நமக்குப் பகைவன் கொல்லோ தோழி. எ - று. (௫)

54 என்னையர் தந்த *இறவுணங்கல் யாங்கடிந்து
புன்னையங் கான †லிருந்தேமாப் பொய்த்தெம்மைச்
சொன்னலங் கூறி நலனுண்ட சேர்ப்பனை
யென்னைகொல் யாங்காணு மாறு.

என்றது காமமிக்க கழிபடர்கிளவி.

(இ - ள்) என்னையர் தந்த இறவுணங்கலிற் படிந்த புட்களை யாங்கடிந்து புன்னையங் கானலின்கண் இருந்தேமாக வஞ்சித்து எம்மைத் தன் சொன்னலத்தாற் புகழ்ந்து கூறி எமது நலத்தை நுகர்ந்த சேர்ப்பனை யாங் காணு நெறி யாதுகொல். எ - று. (௬)

---

(பிரதிபேதம்) * இறவுணங்கல் யான். †இருந்தேமான் முன்னோர்நாள்.

55 கொக்கார் கொடுங்கழிக் கூடுநீர்த் தண்சேர்ப்ப
னக்காங் கசதி தனியாடித்—தக்க
பொருகயற் கண்ணினுப் புல்லான் விடினே
யிருகையும் நில்லா வளை.

இது தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழியாற்
சொல்லெடுப்புண்ட தலைமகள் சொல்லியது.

(இ - ள்) மாஞ்சோலை நிறைந்த வளைந்த கழியினையுடைய பொருந்திய நீர்த்தண் சேர்ப்பன் நம்மொடு ..............டுவனாயின் இருகையினுமுள்ள வளைகள் நில்லாகாண்; பொருந்தியபொருகயற் கண்ணினாய். எ - று. (எ)

56 நுரைதரு மோதங் கடந்தெமர் தந்த
கருங்கரை வன்மீன் கவரும்புள் ளோப்பிற்
புகரில்லைம் யாமிருப்பப் பூங்கழிச் சேர்ப்ப
னுகர்வன னுண்டா னலம்.

என்றது............

(இ - ள்) ...... கது தந்த பன்மீன்களைக் கவர்கின்ற புள்ளினை ... எ - று. (அ)

57 கொடுவாய்ப் புணரன்றில் கொய்மடற் பெண்ணைத்
*தடவுக் கிளைபயிருந் தண்கடற் சேர்ப்ப
னிலவுக் கொடுங்கழி நீந்திநம் முன்றிற்
புலவுத் திரைபொருத போழ்து.

என்றது இரவுக்குறி.....

(இ - ள்)...வந்து எறிப் பொருத இப் பொழுதின்கண் கொய்மடற் பெண்ணைமேற் கொடுவாய்ப் புணரன்றில்கள் தமது பெருங் கிளையை அழையாநின்றன. எ - று. (க)

---

(பிரதிபேதம்) * தடவக்கிளை.

58 சுறாவெறி குப்பை சுழலுங் கழியு
ளிறாவெறி யோத மலற விரைக்கு
முறாஅநீர்ச் சேர்ப்பனை யுள்ளி யிருப்பிற்
பொறாஅவென் முன்கை வளை.

என்றது காமமிக்க கழிபடர் கிளவி.

(இ - ள்) சுறாவாலெறியப்பட்ட மீன் குப்பைகள் சுழலுங் கழியுள் வந்து இறாவினைச் சிந்தியெறியு மோதம் அலறி யொலிக்கின்ற, நம்மோடு அன்புறாத முந்நீர்ச்சேர்ப்பனை நினைந்திருப்பேனாயின் என் முன்கை வளையைத் தாங்கா. எ - று, (௧௦)

59 தாழை குருகீனுந் தண்ணந் துறைவனை
மாழை*மா னோக்கின் மடமொழி—நூழை
நுழையு மடமகன் யார்கொலென் றன்னை
புழையு மடைத்தாள் கதவு.

என்றது இரவுக்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி படைத்து மொழிந்தது.

(இ - ள்) தாழைகள் குருகுபோலப் பூக்குந் தண்ணந் துறைவனை நமது நுழையை நுழைந்து புகுகின்ற அறிவில்லாத ஆடவன் யார்கொல்லோ......நம்மன்னை மாழைமானோக்கினையுடையாய்! புழைவாயினையும் அடைத்தாள்கொல்லோ கதவினால். (௧௧)

இது, வரையாநாளிடை வந்தோன் முட்டியவழித் தலைவி கூறியதற்கும் வந்தோன் செவிலியை எதிர்ந்துழிக் கூறியதற்கும் (தொல். கள. சூ. 22. இளம். 21. நச்.) இதன் பின்னிரண்டடி, செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறியதற்கும் (நாற். வரைவி. சூ. 6) மேற்கோள்.

60 பொன்னம் பசலையுந் தீர்ந்தது †பூங்கொடி
தென்னவன் கொற்கைக் குருகிரிய—மன்னரை

---

(பிரதிபேதம்) * மானோக்கி மடமொழி. † பூங்கொடியே.

யோடு புறங்கண்ட வொண்டாரான் றேரிதோ
கூட *லணைய வரவு.

என்பது தோழி தலைவிக்குத் தலைவன் வரைவோடு புகுந்தமை சொல்லியது; வினை முற்றிமீண்ட தலைமகன் வரவறியச் சொல்லியதூஉமாம்.

(இ - ள்) பூங்கொடியே! நினது மேனியிற் பொன் போன்ற பசலையுந் தீர்ந்தது. மன்னரை ஓடு புறங்கண்ட ஒண்டாரனாகிய நங்காதலன்றேர் தென்னவன்கொற்கையின்கட் குருகுகளெல்லா மிரிய வந்த வரவு இது. எ - று. (௬௨)

ரு. நெய்தல் †முடிந்தது.

ஆகச் செய்யுள் ௬௦.

‡மாறோகத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார்
புல்லங்காடனார் செய்த
கைந்நிலை முடிந்தது.

---

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகு கோவை பழமொழி மாமூல
மின்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பதூஉங்
கைந்நிலையு மாகுங் கணக்கு.

மாப்புலவ ரெல்லாரு மாக்கூடன் முன்னிருந்து
பாற்படுத்த தென்றமிழின் பாநான்கின்—வாய்ப்புடைத்தாப்
பண்பாய்ந் துரைத்த பதினெட்டுக் கீழ்க்கணக்கும்
வெண்பாவின் பாலுரைத்தார் மிக்கு.

---

(பிரதிபேதம்) * அணைய. † முற்றும். ‡ மகோந்து முள்ளிநாட்டுக் காவாதியனார் புல்லங்காடர் செய்த கைந்நிலை யறுபது முற்றிற்று.

1 'கல்லிடைக் குறிச்சிப் பக்கத்தையு முள்ளிநாடென்ப' என்ற ஒரு குறிப்பு, புதிதாக எழுதப்பெற் றுள்ளது.

# கைந்நிலைச் செய்யுள் முதற்குறிப்பகராதி

எண், செய்யுளின் எண்.


| | | | |
|---|---|---|---|
| அரக்காம்பல் | 47 | தாராவிரியுந் | 40 |
| அரக்கார்ந்த | 19 | தாழைகுருகீனுந் | 59 |
| அலவன்வழங்கு | 53 | நாகநறுமலர் | 12 |
| அன்னையுமில் | 52 | நாவாய்வழங்கு | 49 |
| ஆந்தைகுறங் | 52 | நீத்தநீரூர | 42 |
| ஆமாசிலைக்கு | 18 | நுகர்தலிவருங் | 1 |
| இரசங்கொண் | 5 | நுரைதருமோதங் | 56 |
| எறிகிளர்கேழல் | 11 | நெடுங்கடற்றண் | 50 |
| என்னையர்தந்த | 54 | பாசிப்பசுஞ் | 3 |
| ஒங்கல்விழுப் | 4 | பிடவங்குருந்தொடு | 36 |
| கடமாவிரிந் | 17 | போய்கைநல் | 41 |
| கடுகியதரலைக்கு | 13 | பொன்னம்பசலை | 60 |
| கதநாய்துரப்ப | 14 | பொன்னிணர்வேங்கை | 10 |
| கயநீர்நாய் | 46 | போதவிழ்தாமரை | 43 |
| கயலினம்பாயு | 38 | மணிநிறநெய்தல் | 51 |
| கருங்கைக்கத | 8 | மரையாவுகளு | 6 |
| கல்வரையேறி | 7 | பூட்டமுதுநீர் | 39 |
| கழனியுழவர் | 37 | முல்லையெயிறீன | 34 |
| கள்வர்திரிதரூஉங் | 22 | பூத்தேமலரிப்பாண | 45 |
| காந்தளரும்புகை | 9 | வேஞ்சுரங் | 24 |
| கார்செய்புறவிற் | 25 | வெந்தபுனத்துக்கு | 2 |
| காரெதிர்வானங் | 32 | ‡கடுங்கதிர் | 15 |
| குருதிமலக்— . | 26 | ‡குருந்தலர | 29 |
| கோக்கார்கொடுங் | 55 | ‡சொன்றை | 30 |
| கொக்கார்வள | 48 | ‡டைப்பால்வா | 35 |
| கொடுவாய்ப்புண | 57 | ‡பெய்தபுறவிற் | 28 |
| சிலையொலிவெங் | 23 | ‡யொல்கப் புகுதரு | 27 |
| சூருவெறி | 58 | ‡வானம்வந்துதுளி | 31 |
| தண்டுறையூரன | 44 | ‡விழ்க்குமோவாத | 20 |
| தளையவிழ்தே | 33 | ‡வுறையுமெல்லென் | 16 |


‡ இக்குறியிடப்பெற்றவை செய்யுளின் முதலன்ற; அவ்வெண்ணுள்ள பாடல்களிற் கிடைத்த பகுதியின் முதல்.